மலர் 05
இதழ்: 02

# தேடல்

## வணிக சஞ்சிகை




EASTERN UNIVERSITY SRI LANKA
PER ARDUA AD SCIENTIAM

வர்த்தகத் துறை, | வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

ISSN:
2682 - 7328
2023

# “ஆசிரியர் குழுவிடமிருந்து”

கிழக்கு பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீட, வர்த்தகத்துறையினால் தேடல் எனும் இச்செய்தியேடு கடந்த பதினைந்து வருடங்களாக வெளியிடப்பட்டு வருகின்றது. பல்வேறு வேலைப்பழுவிற்கு மத்தியிலும் எமது துறை விரிவுரையாளர்களின் பெரும் ஒத்துழைப்புடன் ஓர் வணிகச்சஞ்சிகையாக மாற்றம் பெற்று தற்பொழுது ஐந்தாவது மலரின் இரண்டாவது இதழை வெளியிடுவதில் நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இவ்வெளியீட்டினூடாக உயர்தர வகுப்பு வணிகத்துறை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பங்களிப்பதே எமது நோக்கமாகும். இவ்விதழில் எமது விரிவுரையாளர்களால் எழுதப்பட்ட வணிகம் மற்றும் நடைமுறை விடயங்கள் தொடர்பான கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. எதிர்வரும் அடுத்த வெளியீடுகளிலும் இவ்வாறான கட்டுரைகளும் வணிகச் செய்திகளும் வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் எமது முயற்சிக்கு உங்களது மிகுந்த ஆதரவுகளையும் நாம் தொடர்ந்து எதிர்பார்க்கின்றோம்.

# ஆலோசனைக் குழு

பேராசிரியர் ந இராஜேஸ்வரன் (பேராசிரியர் - கணக்கீடு மற்றும் நிதி)
திரு ரெ உதயகுமார் (சிரேஸ்ட விரிவுரையாளர் - தரம் 1)
கலாநிதி சு பாலேந்திரன் (சிரேஸ்ட விரிவுரையாளர் - தரம் 1)
திருமதி சு சிறிதரன் (சிரேஸ்ட விரிவுரையாளர் - தரம் 1)
திரு த பரந்தாமன் (சிரேஸ்ட விரிவுரையாளர் - தரம் 1)
திரு ம ச தயாராஜ் (சிரேஸ்ட விரிவுரையாளர் - தரம் 2)

# வெளியீடு

வர்த்தகத்துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

# தொடர்புகள்

பதிப்பாசிரியர்:
செல்வி. சுரனுதா சிவராஜா (தகுதிகாண் விரிவுரையாளர்)
வர்த்தகத்துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

# உள்ளடக்கம்

01
02

**இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம்**
திருமதி. கீர்த்திகா ஜினராஜன்
(துகுதிகாண் விரிவுரையாளர்)

03
06

**வாழ்க்கையை வெற்றி கொள்ள உதவும் ஆங்கில மொழித்திறன்**
செல்வி. சுரனுதா சிவராஜா
(துகுதிகாண் விரிவுரையாளர்)

07
10

**திரவத்தன்மை முகாமைத்துவத்தில் மத்திய வங்கியின் வகிபாகம்**
திருமதி. பேபிஜாலினி ஜோன்போல்
(துகுதிகாண் விரிவுரையாளர்)

# இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம்

**திருமதி. கீர்த்திகா ஜினராஜன்** (தகுதிகாண் விரிவுரையாளர்)
வர்த்தகத்துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

நிதியியல் வசதிக்குட்படுத்தல் என்பது தனிப்பட்டவர்களும் வியாபாரங்களும் அவர்களது தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக அணுகுகின்ற பயன்மிக்கதும் தாங்கிக்கொள்ளக்கூடியதுமான நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகள் - கொடுக்கல்வாங்கல்கள், கொடுப்பனவுகள், சேமிப்புக்கள், கொடுகடன் மற்றும் காப்புறுதி - பொறுப்புமிக்கதும் நீடித்துநிலைத்திருக்கும் வழியில் வழங்கப்படுவது என பரந்த அடிப்படையில் வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. நிதியியல் வசதிக்குட்படுத்தல் தனிப்பட்டவர்களும் வியாபாரங்களும் தமது வருமான மூலங்களையும் வாழ்க்கைத்தரத்தினையும் மேம்படுத்துவதற்காக முறைசார்ந்த நிதியியல் துறையில் பங்கேற்கும் நிதியியல் பணிகளை பயன்படுத்திக்கொள்வதற்கும் காணப்படக்கூடிய தடைகளை அகற்றுவதற்குமாக கடுமையாக முயற்சிப்பதன் காரணமாக அது நிதியியல் வசதிக்குட்படுத்துவது எனவும் அடையாளப்படுத்தப்படுகிறது.

2000ஆம் ஆண்டின் தொடக்கப்பகுதியிலிருந்து நிதியியல் வசதிக்குட்படுத்தல் கருதுகோள் உலகளாவிய கொள்கை நிகழ்ச்சி நிரலின் மையப்பகுதியாக மாறி இருக்கின்றது. அநேகமான நாடுகள் நிதியியல் வசதிக்குட்படுத்தலை, தனிப்பட்டவர்களும் வியாபாரங்களும் வறுமையிலிருந்து வெளியேறவும் நீடித்துநிலைத்திருக்கும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதற்குமாக தாமாகவே தம்மை உயர்த்திக்கொள்வதற்கான சம வாய்ப்புக்களை ஊக்குவிக்கின்றதொரு முயற்சியாக பயன்படுத்துகின்றன.

நிதியியல் துறையிலிருந்து புறந்தள்ளப்படுகின்றவர்கள் அவர்களது நிதியினை திட்டமிடுவதற்கும் சிறந்த முறையில் முகாமைப்படுத்திக்கொள்வதற்கும் இயலுமைப்படுத்துவதற்கும் நிதியியல் பணிகளையும் சாதனங்களையும் அணுகுவதனை அதிகரிக்கின்ற வேளையில், சிறந்த வாழ்க்கைத்தரத்திற்கான வாய்ப்புக்களும் திறக்கப்படுகின்றன. நுண்பாக, சிறிய, நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு நிதியினைப் பெறக்கூடியதாக இருப்பது, புதியதும் கூடுதலானதுமான உற்பத்தி வியாபார நடவடிக்கைகளில் முதலீடு செய்வதற்கும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதற்கும் அவர்களை ஊக்குவிக்கின்ற வேளையில், தொழில்வாய்ப்புக்களும் உருவாக்கப்படுகின்றன.

நிதியியல் வசதிக்குட்படுத்தல் மாத்திரம் வறுமையிலிருந்து மக்களைத் தூக்கிவிடாது என்கின்றபோதும் இது சிறந்த வாழ்க்கையினைக் கட்டியெழுப்புவதற்கான ஊக்குவிப்பிற்கு உதவும். மேலும், நாடொன்றின் நிதியியல் உறுதிப்பாட்டிற்கான வலுவான அத்திவாரத்தினைக் கட்டியெழுப்புவதில் நிதியியல் வசதிக்குட்படுத்தலின் முக்கியத்துவம் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.இதன்மூலம் அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார அபிவிருத்திக்கும் வசதியளிக்கப்படுகிறது.

நிதியியல் வசதிக்குட்படுதல் உபாயமானது நான்கு முக்கிய தூண்களைச் சுற்றி மையப்படுத்தப்பட்ட குறிக்கோள்களின் தொகுப்பொன்றினை வரைவிலக்கணம் செய்கிறது.

I. டிஜிட்டல் நிதி மற்றும் கொடுப்பனவுகள்
II. நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் நிதி
III. நுகர்வோர் பாதுகாப்பு, மற்றும்
IV. நிதியியல் அறிவினையும் இயலாற்றலையும் கட்டியெழுப்புதல்

நிதியியல் வசதிக்குட்படுத்தல் தொடர்பில் இலங்கை எங்கே நிற்கின்றது? நிதியியல் வசதிக்குட்படுத்தலை அதிகரிப்பதற்கான இலங்கையின் நீண்டகால முயற்சி 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து ஆரம்பமாகிறது. இம்முயற்சிகளின் விளைவாக இலங்கை நிதியியல் வசதிக்குட்படுத்தலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளது. பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம், உலக வங்கிக் குழுமம் என்பனவற்றின் ஆதரவுடன் 2021இல் இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின்படி, இலங்கையில் கணக்கினைச் சொந்தமாக வைத்திருப்பவர்களின் நிலை 88 சதவீதமாகக் காணப்பட்டது. இது தென்னாசிய சராசரியினைவிட உயர்வானதாகும்.

இப்பின்னணியில், இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் உருவாக்கம் சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட முயற்சியாக கருதப்படுவதுடன் இலங்கையில் நிதியியல் வசதிக்குட்படுத்தலை எய்துவதற்காக நீண்டகால, அனைத்தையுமுள்ளடக்கிய, ஒருங்கிணைக்கப்பட்ட உபாயத்தினை மேற்கொள்வதற்காக அனைத்து முக்கிய ஆர்வலர்களையும் ஒன்றுசேர்த்திருக்கிறது. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் அபிவிருத்தி அரச நிறுவனங்கள், முறைசார்ந்த நிதியியல் பணிகளை வழங்குவோர் மற்றும் ஏனைய தொழில்சார் சபைகள் உள்ளிட்ட அனைத்து ஆர்வலர்களினதும் ஒத்துழைப்புடன் இலங்கை மத்திய வங்கியினால் வழிநடத்தப்படுகிறது.

இதனடிப்படையில் இலங்கை குறிப்பிட்ட கால வேளையில் நிதியியல் வசதிக்குட்படுத்தல் தொடர்பாக அடைய வேண்டிய இலக்கை அடைய தேவையான உபாயங்களை அங்கீகரிக்கப்பட்ட வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் ஊடாக அடையும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. உபாயமானது ஒட்டுமொத்த தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் மட்டத்தினை மேம்படுத்துவதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை நிறைவுசெய்வதன் மூலம் வருமானம், புவியியல்சார் அமைவிடம், வயது, பால் போன்ற சமூக மற்றும் குடித்தொகையியல் மனோபாவங்களுடன் இணைந்த நிதியியல் வசதிக்குட்படுத்தல் மட்டங்களில் காணப்பட்ட சமமற்ற தன்மைகளை குறைத்துவிடுவதனையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

*“Financial inclusion matters not only because it promotes growth, but because it helps ensure prosperity is widely shared. Access to financial services plays a critical role in lifting people out of poverty, in empowering women, and in helping governments deliver services to their people.”*

*Sri Mulyani Indrawati, Minister of Finance of Indonesia, former head of the World Bank Group*

**உசாத்துணைகள்**

Kelegama, S. (2020, July 22). Financial inclusion, regulation, and education in Sri Lanka. Asian Development Bank. https://www.adb.org/publications/financial-inclusion-regulation-and-education-sri-lanka

Launching of the First-ever National Financial Inclusion Strategy of Sri Lanka (2021, March 04). Central Bank of Sri Lanka. https://www.cbsl.gov.lk/en/news/launching-of-the-first-ever-national-financial-inclusion-strategy-of-sri-lanka

# வாழ்க்கையை வெற்றிகொள்ள உதவும் ஆங்கிலமொழித்திறன்

செல்வி. சுரனுதா சிவராஜா (தகுதிகாண் விரிவுரையாளர்)
வர்த்தகத்துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

க.பொ.த உயர்தரத்தில் மாவட்ட ரீதியிலும் தேசிய ரீதியிலும் சாதிக்கும் திறமை வாய்ந்த மாணவர்கள் பல்கலைக்கழகம் நுழைந்தபின் பெரும்பாலானோர் பிரகாசிப்பதில்லை. பலதரப்பட்ட மாணவர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் அடிப்படையில் ஆங்கிலமொழியே இவர்களின் பின்னடைவிற்கு முக்கிய காரணமாகும். பல்கலைக்கழகத்தில் விரிவுரைகளை விளங்கிக் கொள்ளவும் பரீட்சையில் திறம்பட தன்னுடைய கருத்துக்களை ஆங்கிலத்தில் முன்வைக்கவும் மாணவர்கள் சவாலை எதிர்நோக்குகின்றனர். சில மாணவர்களின் பல்கலைக்கழக இடைவிலகலுக்கும் இது காரணமாக அமைந்துள்ளது.

இக்கட்டுரையானது மாணவர்கள் ஆங்கிலமொழித்திறனில் பின்னடைவாக காணப்படுவதில் மாணவர்களின் பங்களிப்பு என்ன என்பதையும் க.பொ.த உயர்தரத்தில் வர்த்தகத்துறையில் கல்வி பயிலும் மாணவர்கள் ஆங்கிலமொழித்திறனில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டிய அவசியத்தையும் மாணவர்கள் தன்னிச்சையாக ஆங்கிலமொழித்திறனை வளர்த்துக்கொள்ளும் சில வழிமுறைகளையும் விளக்குகின்றது.

## மாணவர்கள் ஆங்கிலமொழித்திறனில் பின்னடைவாக காணப்படுவதில் மாணவர்களின் பங்கு

இலங்கை மாணவர்கள் ஆங்கிலமொழித்திறனில் பின்னடைவாக காணப்படுவதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. பாடசாலைகளில் கற்றல் மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள போதியளவு பௌதீக மற்றும் மனித வளங்களின்மை, பாடத்திட்டங்களில் அதிகளவான முக்கியத்துவம் வாசித்தல் (Reading), எழுதுதல் (Writing), மற்றும் இலக்கணம் (Grammar) ஆகிய பிரிவுகளுக்கு வழங்கப்பட்டு கிரகித்தல் (Listening) , மற்றும் கதைத்தல் (Speaking) பிரிவுகள் கவனத்தில் எடுக்கப்படாமை, ஆங்கில ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை அதிகரிக்க போதியளவு பயிற்சிகள் வழங்கப்படாமை, பெற்றோரின் ஊக்கமற்றநிலை என பல்வேறு காரணிகளைக் குறிப்பிடலாம்.

**I** **பாடசாலையில் கற்ற விடயங்களை அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தாமை**
மாணவர்கள் ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கற்று சித்தியடைய வேண்டும் என நினைக்கின்றார்களே தவிர அன்றாட வாழ்க்கையில் கற்ற விடயங்களை பிரயோகம் செய்வதில்லை. அதன் காரணமாக ஆங்கிலத்தில் சரளமாக பேசவோ கலந்துரையாடலில் ஈடுபடவோ முடிவதில்லை.

**II** **மற்றவர்களின் கருத்து தொடர்பில் அதிக அக்கறை**
பிறரின் அவமானப்படுத்தல்கள் மற்றும் கேலிப்பேச்சை விரும்பாத மாணவர்கள் ஆங்கிலத்தை பேசும்போது ஏதேனும் உச்சரிப்பு மற்றும் இலக்கணப் பிழைகளை விட்டுவிடுவோமோ அத்துடன் பிறரின் பேசு-பொருளாக ஆகிவிடுவோமோ என்ற அச்சத்தில் ஆங்கில பயன்பாட்டை முற்றாக தவிர்க்கின்றனர்.

**III** **எதிர்மறையான மனப்பாங்கு**
பெரும்பாலான மாணவர்கள் புத்திசாலிகள் இயற்கையாகவே பிறக்கின்றார்கள் என்ற மனநிலையுடன் காணப்படுகின்றனர். மாறாக மொழித்திறனை வளர்த்துக்கொள்ளலாம் என்ற மனநிலை அற்றவர்கள். சிறுவயதில் ஆங்கிலம் ஒரு கடினமான பாடமாக காணப்பட்டமையால் தன்னால் வாழ்நாள் முழுவதும் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற முடியாது என்ற எண்ணத்துடன் காணப்படுகின்றனர்.

**VI** **ஆசிரியர் மீதான வெறுப்பு**
சில பாடங்களை மாணவர்கள் வெறுப்பதற்கு அதைக்கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பெரும்பங்கு உண்டு. வகுப்பறையில் ஏனைய மாணவர்களின் முன்னிலையில் இழிவுபடுத்தும் மாணவர்களுக்கு ஊக்கத்தை அளிக்காத ஆசிரியர்களை மாணவர்கள் வெறுக்கும் அதேவேளை அப்பாடத்தையும் வெறுக்கின்றனர்.

## க.பொ.த உயர்தரத்தில் வர்த்தகத்துறையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஆங்கிலமொழித்திறனின் முக்கியத்துவம்

உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் தாம் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக பிரதானமான மூன்று பாடங்களிலேயே தங்களது முழுக்கவனத்தையும் செலுத்துகின்றனர். க.பொ.த உயர்தரத்தில் ஆங்கிலம் ஒரு பாடமாக உள்ளடக்கப்பட்டிருந்தாலும் பல்கலைக்கழக தெரிவிற்கு ஆங்கில மொழியில் சித்தி அவசியம் இல்லை என்பதால் மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் உள்ளடங்கலாக அனைவரும் ஆங்கில கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளை அம்மூன்று ஆண்டுகளும் தவிர்ப்பதை அவதானிக்கலாம். இருப்பினும் பாடசாலை வாழ்கைக்குப் பின்னர் வாழ்வின் முக்கிய அங்கக்களில் ஆங்கில மொழியின் தேவைப்பாடு இருப்பதை யாரும் கவனிப்பதில்லை. ஆகவே மாணவர்கள் ஆங்கில மொழியினை கற்பதால் கிடைக்கும் நன்மைகளை அறிந்து அதைக் கற்றுக்கொள்வதற்கான ஆர்வத்தை சிறுவயதிலிருந்தே வளர்த்துக்கொள்ள வேண்டும். ஆங்கில மொழியினை கற்பதால் கிடைக்கும் நன்மைகள் சில பின்வருமாறு :

**I**

**பல்கலைக்கழக கல்வி மற்றும் ஏனைய உயர்கல்வியை எந்தவித இடையூறுமின்றி தொடர**

இலங்கைப் பல்கலைக்கழகம் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் முகாமைத்துவம் மற்றும் வர்த்தகம் சார்ந்த பாடநெறிகள் ஆங்கிலத்திலேயே வழங்கப்படுகின்றன. ஆகையால் வர்த்தகத் துறையில் பயின்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் காணப்படும் மொழித்திறன் விரிவுரைகளை விளங்கிக் கொள்ளவும் பரீட்சையில் திறம்பட தன்னுடைய கருத்துக்களை முன்வைக்கவும் மதிப்பீடுகளில் சிறந்த பெறுபேற்றைப் பெறவும் உதவும்.

**II**

**சிறந்த தொடர்பாடலுக்கு**

பல்கலைக்கழக வாழ்வானது பாடசாலையைப் போலன்றி முற்றிலும் மாறுபட்டது. பல்லினத் தன்மையான மாணவர்களும் பல்வேறு பிரதேசங்களிலிருந்து வந்தடைந்து கூட்டாக கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இடமாகும். வேறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டிய தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களிலெல்லாம் ஆங்கிலம் ஒரு பொது மொழியாக சிறந்த தொடர்பாடலுக்கு வழிசமைக்கும்.

**III**

**ஆங்கிலம் ஒரு வணிக மொழியாகும்**

50 இற்கும் அதிகமான நாடுகளின் அரச கரும மொழியாக காணப்படும் ஆங்கிலமானது உலகில் ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்களால் பயன்படுத்தப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் பல மில்லியன் கணக்கான கம்பனிகளால் பயன்படுத்தப்படும் ஆங்கிலமொழி சர்வதேச வணிகத்தின் மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆகையால் வணிக மற்றும் வர்த்தக முயற்சியாண்மைகளில் ஈடுபடவும் அதை சர்வதேச ரீதியில் விரிவுபடுத்த முனையும் மாணவர்களுக்கு ஆங்கில மொழித்தேர்ச்சி அவசியமாகும்.

**IV**

**வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள**

ஆரம்பகாலப்பகுதிகளில் ஒரு மேலதிக தகைமையாக கருதப்பட்ட ஆங்கில மொழித்திறன் தற்காலத்தில் ஒரு அடிப்படைத் தகைமையாக கருதப்படுகின்றது. நேர்முகத் தேர்வை சிறப்பான எதிர்கொள்ளவும் ஏனைய விண்ணப்பதாரிகளிடமிருந்து தனித்து திறம்பட செயற்படவும் வேலைக்கு தெரிவுசெய்யப்படுமிடத்து அன்றாட வேலைகளை செவ்வனே நிறைவேற்றவும் ஆங்கில மொழித்திறன் அவசியமாகும்.

**V**

**நல்லிணக்கத்தைப் பேண**

உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை இரண்டு அரச கரும மொழிகளைக் கொண்ட ஒரு சிறிய நாடாகும். இருப்பினும் தமிழைக் கற்றுக்கொள்ள சிங்கள மக்களும் சிங்களத்தை கற்றுக்கொள்ள தமிழ் மக்களும் காட்டும் ஆர்வம் மிகச்சிறியதே. இலங்கையில் பெரும்பாலான முரண்பாடுகளுக்கு பிறரின் கருத்துக்களைப் புரிந்து கொள்வதில் காணப்படும் மொழி தொடர்பான இடர்பாடே காரணமாகும். அவ்வகையான சந்தர்ப்பங்களிலெல்லலாம் ஆங்கிலம் ஒரு இரண்டாம் மொழியாக பிணக்குகளைத் தவிர்க்க வழிகோலும்.

## மாணவர்கள் தன்னிச்சையாக ஆங்கிலமொழித்திறனை வளர்த்துக்கொள்ளும் முறைகள்

இக்கால சந்ததியைச் சேர்ந்த மாணவர்கள் பிறரின் உதவியின்றி தாமாகவே புதிய விடயங்களைக் கற்றுக்கொள்வதில் நாட்டம் கொண்டவர்கள். ஆங்கிலமொழித்திறனை தன்னிச்சையாக வளர்த்துக்கொள்ளும் சில வழிமுறைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**I**

**அன்றாட வாழ்வில் ஆங்கிலமொழிப் பிரயோகம் (Everyday Usage of English)**
ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கொண்ட இலங்கை மாணவர்கள் கற்றவற்றை பிரயோகிப்பதற்கு பொருத்தமான சூழலை உருவாக்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகும். கிடைக்கும் சிறுசிறு சந்தர்ப்பங்களிலெல்லாம் ஆங்கிலத்தைப் பிரயோகிப்பது மொழித்திறனை விருத்தியடையச்செய்யும்.

- நண்பர்களுக்கு ஆங்கிலத்தில் குறுஞ்செய்தி அனுப்புதல் (SMS)
- சமூக வலைத்தளங்களில் தங்களுடைய கருத்துக்களை ஆங்கிலத்தில் பகிருதல் (Facebook, Instagram, Linked In, X & etc )
- சமையலறையில் காணப்படும் மசாலா மற்றும் ஏனைய போத்தல்களுக்கு ஆங்கிலத்தில் சிட்டை (Label) குறித்து வைத்தல். உதாரணமாக (Chili Powder, Pepper, Tea, Coffee)
- கடைக்குச் சென்று வாங்க வேண்டிய பலசரக்குப் பொருட்களின் பட்டியலை ஆங்கிலத்தில் குறித்துக்கொள்ளல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**II**

**தனக்கென்று சொல்லகராதி ஒன்றை உருவாக்கிக்கொள்ளல் (Independent Dictionary)**
அன்றாட வாழ்வில் புத்தகங்களில் பத்திரிகைகளில் தொலைக்காட்சி மற்றும் வானொலிகளில் பல்வேறு விதமான புதிய சொற்களை மாணவர்கள் பார்த்தும் கேட்டும் அறிகின்றனர். இவ்வாறான புதிய சொற்களை உள்ளடக்கிய சொல்லகராதியை உருவாக்கி அதன் கருத்தையும் குறித்து வைப்பதன் மூலம் சொற்திறனை (Vocabulary) ஐ வளர்த்துக்கொள்ளலாம்.

**III**

**வசன வரிகளின் பயன்பாடு (Usage of Subtitles)**
ஆங்கிலமொழியை ஒரு பாடமாக அன்றி ஆங்கில படங்கள் நாடகங்கள் மற்றும் பாடல்களை பார்த்தும் கேட்டும் இரசிக்கும் போது பொழுதுபோக்குடன் மொழியை விருத்தி செய்ய முடியும். அத்துடன் வசன வரிகளின் பயன்பாடு (Subtitles) மாணவர்கள் தங்களுடைய கிரகித்தல் மற்றும் பேசும் திறனை (Listening and speaking skill) ஒப்பிட்டு பார்க்கவும் பிழைகள் இருப்பின் அவற்றைத் திருத்திக்கொள்ளவும் உதவும்.

**IV**

**சத்தமாக வாசித்தல் (Reading out Loud)**
ஆங்கில புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகளை சத்தமாக வாசிக்கும் போது ஏதேனும் சொல்லை உச்சரிப்பதில் மாணவர்கள் எதிர்கொள்ளும் இடர்பாட்டை இலகுவாக இனங்காணலாம். தொடர்ந்து கையடக்கத்தொலைபேசி மூலமோ கணனி மூலமோ சரியான உச்சரிபை அறிந்து தாமாகவே திருத்திக்கொள்ளலாம். ஆங்கில வசனங்களை சத்தமாக வாசித்தல் மாணவரிடையே மனஉறுதியையும் தன்னம்பிக்கையையும் தூண்டும்.

**V**

**கண்ணாடியில் பேசுதல் (Talking to the Mirror)**
மனிதர்களைப்போல கண்ணாடி கேலி செய்வதில்லை. குறைகளையும் நிறைகளையும் உள்ளதை உள்ளபடி அப்படியே வெளிப்படுத்தும். கண்ணாடியை ஒரு நண்பனாக பாவனை செய்து அதன் முன்னின்று ஆங்கிலத்தில் கலந்துரையாடல் மற்றும் பேச்சு என்பவற்றை ஒத்திகை பார்க்கும் போது மாணவர்களுக்கு முதற்தடவை ஆங்கிலத்தில் பேசும்போது ஏற்படும் சபைக்கூச்சத்தையும் அச்சத்தையும் தவிரத்துக்கொள்ளலாம்.

VI

**முன்னேற்றத்தை அளவிடல் (Measure your Progress)**

பிறரின் உதவியின்றி மாணவர்கள் தங்களுடைய ஆங்கில மொழித்திறன் விருத்தியடைந்துள்ளதா என்பதை தாங்களே அறிந்துகொள்ள இணையத்தில் பல்வேறு வகையான பயிற்சிகள் காணப்படுகின்றன. ஒரு மாதத்திற்கு ஒருமுறையாவது அவ்வகையான பயிற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் நீங்கள் சரியான பாதையில்தானா செல்கின்றீர்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

இலங்கையில் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை அறிந்த நகர்ப்புற பாடசாலைகள் தவிர்ந்து பெரும்பாலான பாடசாலைகளில் உயர்தர ஆங்கிலப் பாடவேளை ஒரு இடைவேளையாக கருதப்படுவதும் பல கிராமப்புற பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியருக்கான நியமனம் இன்னும் வெற்றிடமாகவே பல ஆண்டுகளாக காணப்படுவதும் நாம் அனைவரும் அறிந்ததே. ஆங்கிலம் தொடர்பில் எவ்வாறான தடங்கல்களை எதிர்கொள்கின்ற போதிலும் ஆங்கில மொழியில் காணப்படும் பின்னடைவால் நல்ல திறன்மிக்க மாணவர்களின் வாழ்வானது மழுங்கடிக்கப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். ஆகவே ஆங்கில மொழியின் முக்கியத்துவத்தை உணர்த்தி மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஊட்டுவதும் ஆங்கிலமொழித்திறனை தன்னிச்சையாக வளர்த்துக்கொள்ளும் சில வழிமுறைகளை பரிந்துரை செய்வதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**உசாத்துணைகள்**

Academy, E. A. (2022). English Language Proficiency of Sri Lankan Tamil / Sinhala Speaking Students after 13 Years of Studying the Language at School. SMBM Arshad-MA TESL(R), BA ELT. In International Journal of Academic Multidisciplinary Research (Vol. 6). www.ijeais.org/ijamr

Dweck, C. (2017). *Mindset.* (6th ed.). London: Robinson.

தேடல்
வணிக சஞ்சிகை

# திரவத்தன்மை முகாமைத்துவத்தில் மத்திய வங்கியின் வகிபாகம்
# Role of the Central Bank in Liquidity Management

**திருமதி. பேபிஜாலினி ஜோன்போல்** (தகுதிகாண் விரிவுரையாளர்)
வர்த்தகத்துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## 01. அறிமுகம்

"திரவத்தன்மை" என்ற சொற்பதம் அது பயன்படுத்தப்படுகின்ற சூழ்நிலையைப் பொறுத்து பல பரந்த வரைவிலக்கணங்களைக் கொண்டுள்ளது. பொதுவாக, திரவத்தன்மை பற்றிய மூன்று கருத்துக்கள் திரவத்தன்மை முகாமைத்துவத்துடன் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன.

**சந்தைத் திரவத்தன்மை:** இது சந்தை விலைகள் மீது மட்டுப்படுத்தப்பட்ட தாக்கமொன்றுடன் குறுகிய அறிவித்தலொன்றில் அத்துடன் குறிப்பிடத்தக்க இழப்புகளின்றி நிதியியல் சொத்துக்களை வர்த்தகப்படுத்துவதற்கான இயலுமை ஆகும். எனவே, சந்தைத் திரவத்தன்மை என்பது சந்தையின் விரிவு மற்றும் தாக்குப்பிடிக்கும்தன்மை என்பவற்றுடன் தொடர்புபட்டது.

**நிதியிடல் திரவத்தன்மை:** இது சந்தை ஏற்றுக்கொள்ளத்தக்க செலவில் உரியகால விதத்தில் தீர்ப்பனவுக் கடப்பாடுகளை மேற்கொள்வதற்கு சொத்து விற்பனைகள் அல்லது கடன்பெறுதல்கள் மூலம் எவ்வளவு இலகுவாக நிதியியல் நிறுவனங்கள் நிதியங்களைத் திரட்டுகின்றன என்பதனைக் குறிப்பிடுகின்றது.

**மத்திய வங்கி திரவத்தன்மை:** இது மத்திய வங்கி திரவத்தன்மை நோக்கத்திற்காக குறித்த நாளொன்றில் மத்திய வங்கியொன்றுடன் வைத்திருக்கப்படும் ஒதுக்கு நிலுவைகளின் மொத்தத்தைக் குறிப்பிடுகின்றது. இது, "கூட்டு திரவத்தன்மை" அதாவது நாணயத் தொழிற்பாட்டு நோக்கத்திற்காக வங்கித்தொழில் முறைமைக்கு மத்திய வங்கி வழங்குகின்ற ஒதுக்குகளின் மொத்தத்தை எடுத்துரைக்கின்றது.

மத்திய வங்கியின் திரவத்தன்மை முகாமைத்துவமானது, குறுகியகால வட்டி வீதங்களைக் கட்டுப்படுத்துவதற்கு வர்த்தக வங்கி ஒதுக்குகளின் தொகையினை வழிநடாத்துவதில் பிரயோகிக்கப்பட்டு வருகின்ற சாதனங்கள் மற்றும் கருவிகளைக் கொண்ட தொகுதியொன்றான கட்டமைப்பு என விவரணம்செய்யப்படுகின்றது. மத்திய வங்கி திரவத்தன்மை முகாமைத்துவத்தின் முதன்மைக் குறிக்கோள், **குறுகிய கால வட்டி வீதங்களை வழிநடத்துதல் அத்துடன் கொடுப்பனவு முறைமையின் தொடர்ச்சியான தொழிற்படுதல் என்பன ஊடாக கொள்கைக் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு உதவுவதற்கு வங்கித்தொழில் முறைமையில் மொத்த ஒதுக்குகளின் மட்டத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதாகும்.** எனவே, சந்தை வட்டி வீதங்களும் கொடுகடன் உருவாக்கமும் திரவத்தன்மையுடன் நெருங்கி தொடர்புபட்டுள்ளதனால் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் செயன்முறையினை வசதிப்படுத்துவதில் மத்திய வங்கி திரவத்தன்மை முக்கிய மாறிலியொன்றாகக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், பரந்த நோக்கில், முனைப்பான திரவத்தன்மை முகாமைத்துவமானது விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு இரண்டையும் எய்துவதில் மத்திய வங்கியின் பொறுப்பாணையினுள் அனைத்து மையத் தொழிற்பாடுகளுடனும் ஓரளவிற்கு தொடர்புபடுகின்றது.

நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலில் அது முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றுகின்ற அதேவேளை, கொடுப்பனவு முறைமையின் சீரான தொழிற்பாடும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் பாதுகாப்பும் இன்றியமையாததாக இருக்கின்றது. அதற்கமைய, மத்திய வங்கியின் இரு குறிக்கோள்கள் மீதும் தாக்கத்தைக் கொண்டிருக்கின்ற திரவத்தன்மை முகாமைத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்ற மத்திய வங்கியொன்றின் நாணயக் கொள்கைக் கருவிகள் திரவத்தன்மை மற்றும் பணத்தின் விலை (வட்டி வீதங்கள்) என்பவற்றில் தளம்பலைக் கட்டுப்படுத்துவதை நோக்காகக் கொள்கின்றது. உலகம் முழுவதுமுள்ள மத்திய வங்கிகளும் நாணய அதிகாரசபைகளும் நிதியியல் முறைமையைப் பாதுகாக்கும் நோக்குடன் எதிர்கொள்ளும் சவால்களுக்கு பதிலிறுத்துவதில் திரவத்தன்மை முகாமைத்துவம் மீது மரபுசார்ந்த மற்றும் மரபுசாராக் கொள்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளன.

விசேடமாக நெருக்கடி காலப்பகுதியில் மத்திய வங்கி திரவத்தன்மை வழங்குதலானது நிதியளித்தல் மற்றும் சந்தைத் திரவத்தன்மை என்பவற்றுடன் சாதகமாக இணைக்கப்படக்கூடியது. மத்திய வங்கியானது, இறுதித் திரவத்தன்மை வழங்குநர் என்ற ரீதியில் அதன் இயலளவில் வங்கித்தொழில் முறைமைக்கு வேறுபட்ட வழிகளில் திரவத்தன்மையை வழங்குகின்றது. அவற்றிற்கு மத்தியில், திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் ஊடாக கடன் வழங்குதலானது வங்கித்தொழில் முறைமையில் ஒதுக்குகளை முகாமைசெய்வதற்கு முதன்மை திரவத்தன்மை முகாமைத்துவ கருவியொன்றாகக் காணப்படுகின்றது. இதன்மூலம், சாதாரண பொருளாதார நிலைமைகளில் குறுகியகால வட்டி வீதங்களை வழிநடத்துகின்றது.

தற்காலிக அடிப்படையில் திரவத்தன்மையை வழங்குவதற்கு மத்திய வங்கி நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றது. இதனூடாக மத்திய வங்கியானது, பின்னர் நிதியியல் நிறுவனங்களுக்கு அவற்றை மீளவிற்பனை செய்வதற்கிணங்கி அரசாங்கப் பிணையங்களைக் கொள்வனவு செய்கின்றது. அதேபோன்று நிரந்தர அடிப்படையில் திரவத்தன்மையினை வழங்குவதற்கு உடனடி அடிப்படையில் இரண்டாம்தரச் சந்தையில் மத்திய வங்கி பிணையங்களைக் கொள்வனவு செய்கின்றது. போட்டி விலைக்குறிப்பீட்டு ஏலங்கள் ஊடாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் நடாத்தப்படுகின்றமையினால் இவ் ஏலங்கள் குறிப்பான நிதியியல் நிறுவனமொன்றுக்கு திசைப்படுத்தப்படுவதில்லை. அதேபோன்று இத்தொழிற்பாடுகள் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் முறைமையின் சீரான தொழிற்பாட்டினை உறுதிசெய்வதற்கும் மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைக்கிசைவாக வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தை வீதங்களுக்கான இலக்கினை அடைவதற்கும் மொத்த ஒதுக்கு மட்டத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான மத்திய வங்கியின் விருப்பத்தில் நடாத்தப்படுகின்றன.

மேலும், ஒட்டுமொத்தமான சந்தைக்குப் பதிலாக குறித்த நிறுவனங்களை இலக்காகக்கொண்டு மத்திய வங்கிகள் திரவத்தன்மை வழங்கும் கொடுக்கல்வாங்கல்களை நடாத்துகின்றன. துணைநில் வசதியானது நிதியிடல் திரவத்தன்மை கிடைக்கப்பெறுவதன் அடிப்படையில் நிதி நிறுவனமொன்றின் மூலம் வேண்டப்படும் போதும், வேண்டப்பட்டவாறும் இடம்பெறக்கூடிய கொடுக்கல்வாங்கல் இவ்வகைக்கு பொதுவான உதாரணமாகும். எடுத்துக்காட்டாக, இலங்கை மத்திய வங்கியின் துணைநில் கடன்வழங்கல் வசதியானது வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தை நிலைமைகள் இறுக்கமடைந்துள்ள போது அல்லது குறித்த நிதியியல் நிறுவனமொன்று குறுகியகால நிதியிடல் அழுத்தங்களை எதிர்கொள்ளுகின்ற போது எஞ்சிய நிதியிடல் தேவைகளை நிறைவுசெய்வதற்கு குறித்த நிதியியல் நிறுவனமொன்றிற்கு நேரடியாக திரவத்தன்மையை வழங்குகின்றது. அதேபோன்று நிதியியல் நிறுவனமொன்று நாளின் இறுதியில் மிகையான நிதியங்களை வைத்திருக்குமாயின் அத்தகைய மிகை துணைநில் வைப்பு வசதியினைப் பயன்படுத்தி மத்திய வங்கியிடம் வைத்திருக்கக்கூடியது என்பதுடன் வட்டி வருமானத்தையும் ஈட்டும்.

திரவத்தன்மை முகாமைத்துவத்தில் மத்திய வங்கி பயன்படுத்துகின்ற மரபுசார்ந்த கருவிகளாக இக்கருவிகள் கருதப்படுகின்றன. மரபுசார்ந்த கருவிகளையும் திரவத்தன்மை வசதிகளையும் பயன்படுத்துவதற்குப் புறம்பாக, நிதியியல் நெருக்கடிகளும் சந்தை நிச்சயமின்மையும் திரவத்தன்மை தொழிற்பாடுகளை நடாத்துவதற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் நிதியியல் சந்தைக்கும் மத்திய வங்கி திரவத்தன்மையினை வழங்குவதற்கும் மத்திய வங்கிகள் அவற்றின் கருவித்தொகுதிகளை விரிவுபடுத்துவதற்கு தூண்டுகின்றன.

## 02. இலங்கையில் வங்கித்தொழில் முறைமையில் திரவத்தன்மைப் பற்றாக்குறை

2021 செப்டெம்பர் தொடக்கம், வங்கித்தொழில் முறைமையானது வெளிநாட்டுக் கடன் மீள்கொடுப்பனவுகள், நாணய மீளெடுப்புகளால் தூண்டப்பட்ட நிச்சயமின்மை அத்துடன் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீட்டின் விளைவாக உருவான பற்றாக்குறை என்பவற்றின் பகுதியளவு காரணமாக, ஒட்டுமொத்த முறைமையும் பாதிக்கக்கூடிய திரவத்தன்மை பற்றாக்குறையொன்றினை படிப்படியாக அனுபவித்தது. பேரண்ட பொருளாதார சமநிலையினை மீளமைக்கும் நோக்குடன் 2022 காலப்பகுதியில் எதிர்பாராத கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய வங்கி நிர்ப்பந்திக்கப்பட்டது. சீர்குலைகின்ற பொருளாதார தோற்றப்பாட்டினை திரும்பச்செய்வதற்கு மத்திய வங்கி கொள்கை வீதங்களை 700 அடிப்படைப் புள்ளிகளால் திருத்தியதுடன் அதனைத்தொடர்ந்து சீராக்கங்களை அறிமுகப்படுத்தியது. எனினும், சந்தைத் திரவத்தன்மை தொடர்ந்தும் பற்றாக்குறை மட்டத்திலேயே இருந்ததுடன் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையில் சமச்சீரற்ற திரவத்தன்மை பரம்பல் மூலம் தோற்றுவிக்கப்பட்ட ஒட்டுமொத்த முறைமையினையும் பாதிக்கக்கூடிய திரவத்தன்மை பற்றாக்குறையொன்றை அனுபவித்தது. நிறுவனம் குறித்த பற்றாக்குறைகளுக்கெதிராக ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கக்கூடிய கூட்டு பற்றாக்குறை என்பதனால் அநேகமான வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு சமகாலத்தில் மத்திய வங்கி திரவத்தன்மை தேவைப்பாட்டினை நிறைவுசெய்வது சவால்மிக்கதாகவிருந்தது (நேர்மாற்றுத் தேவைப்பாடு). அத்தகைய, சந்தை முழுவதுமான திரவத்தன்மை நிலைமை, வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தையில் குறைவான செயற்பாட்டுடன் ஒன்றிணைந்து சாத்தியமான நிதியியல் மற்றும் பேரண்ட உறுதிப்பாட்டு விளைவுகளுக்கு வழிவகுக்கக்கூடும்.

பொருளாதாரத்திற்கு நிதியளிப்பதில் வங்கிகள் முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றுவதனாலும் பொருளாதாரத்தின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமையில் முக்கிய இடையேற்பாடாக இருந்துவருவதனாலும் நிதியிடல் திரவத்தன்மையினை நிறைவுசெய்வதற்கு ஒரு வங்கி தவறுகின்றமை ஒட்டுமொத்த கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைக்கும் சாத்தியமான தடை ஏற்படுத்தலாம் என்பதுடன் வங்கிகளில் சாத்தியமான மீளெடுப்புகள் ஊடாக நிதியியல் துறைச் செயலாற்றம் மற்றும் முறைமை உறுதித்தன்மை வேறுவகையில் தடுக்கக்கூடிய நிதியியல் நிறுவனங்களின் முறிவடைதலுக்கு வழிவக்கலாம். வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களுக்கிடையிலான ஒன்றுக்கொன்று இணையப்பெற்றுள்ளமை காரணமாக நிதியியல் முறைமை உறுதிப்பாடு மற்றும் பொதுமக்கள் நம்பிக்கை மீது இறுதியாக பரந்தளவிலான தாக்கங்களைக் கொண்டிருக்கக்கூடிய அதேபோன்று உண்மைப் பொருளாதாரத்தின் மீது முக்கிய தாக்கங்களைக் கொண்டிருக்கக்கூடிய பரவக்கூடிய அத்துடன் கசிவுத் தாக்கங்கள் காணப்படலாம். ஆகையினால், நிதியியல் நிச்சயமின்மைக்கும் ஒட்டுமொத்தமாக பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நெருக்கடியைத் தடுத்து முகாமைசெய்வதில் மத்திய வங்கியின் வகிபாகத்திற்கும் அச்சுறுத்தலைத் தோற்றுவிக்கின்ற நீண்டகால ஒட்டுமொத்தமாக பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய திரவத்தன்மை பற்றாக்குறைகளைக் கருத்திற்கொண்டு, மத்திய வங்கியானது நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாடு இரண்டையும் உறுதிசெய்வதற்கு பல வகையான மரபுசார்ந்த மற்றும் மரபுசாரா திரவத்தன்மை முகாமைத்துவக் கருவிகளைப் பயன்படுத்தியது.

## 03. திரவத்தன்மை முகாமைத்துவக் கட்டமைப்பின் கீழ் பயன்படுத்தப்படும் மரபுசாராக் கருவிகள்

எதிர்கால சாத்தியமான நிதியியல் அதிர்வுகளையும் அவற்றின் விளைவுகளையும் முகாமைசெய்வதற்கு மேலதிகமாக, நிதியியல் முறைமையினைப் பாதுகாக்கின்ற அதேவேளை, சமூகச் செலவை மட்டுப்படுத்துவதற்கான முயற்சியெடுத்தலுக்கு மத்திய வங்கி திரவத்தன்மை முகாமைத்துவம் வழங்குவதன் கீழ் பல்வேறு வழிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. முறைமை முழுவதுமான திரவத்தன்மை இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு மரபுசார்ந்த மற்றும் மரபுசாராக் கொள்கைகள் இரண்டையும் மத்திய வங்கி எதிர்பாரத அளவில் பயன்படுத்தியது. நெருக்கடி தயார்நிலையின் பாகமாகவும் ஒட்டுமொத்த முறைமையினையும் பாதிக்கின்ற திரவத்தன்மை அழுத்தத்தினைத் தீர்ப்பதற்கும் மத்திய வங்கி ஆளுகின்ற சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிதியியல் நிறுவனங்களுக்கும் நிதியியல் சந்தைகளுக்கும் திரவத்தன்மை வழங்குவதற்கு மரபுசாரா புதுமையான திரவத்தன்மை வழங்கல் கருவிகளை மத்திய வங்கி வடிவமைத்துள்ளதுடன் சில அத்தகைய வசதிகள் கீழே தொகுக்கப்பட்டுள்ளன.

### 3.1 மத்திய வங்கியின் திரவத்தன்மை உதவி வசதியினை அறிமுகப்படுத்தல்

இவ்வசதியானது ஏற்கனவே காணப்படுகின்ற சட்ட ஏற்பாடுகளின் அதாவது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் 82 மற்றும் 83(1)(இ) பிரிவுகளின் கீழ் இயலச்செய்யப்பட்டுள்ளது. இதில், எல்லையொன்றுடன் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வசதி வீதத்தின் செலவில் அரசாங்கப் பிணையங்களை வாக்குறுதியளிப்பதன் வாயிலாக பிணையளிக்கப்பட்ட வாக்குறுதிப் பத்திரங்களின் மீது 180 நாட்களை விஞ்சாத ஏதேனும் நிலையான காலப்பகுதிக்கு திரவத்தன்மை உதவி வசதியாக கொடுகடனைப் பெற்றுக்கொள்வதற்கு வங்கித்தொழில் நிறுவனங்கள் தகைமைபெறுகின்றன. கடன் கோரப்பட்ட வங்கியின் திரவத்தன்மை தேவைப்பாடு பற்றிய மதிப்பீடொன்றின் பின்னர் இவ்வசதியின் கீழ் வழங்கப்படும் கொடுகடன் தொகை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படும். இவ்வசதியின் மூலம் ஒப்பீட்டளவில் போட்டி விலையில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைவிட நீண்டகாலத்திற்கு திரவத்தன்மையினைப் பெற்றக்கொள்வதற்கு வங்கிகள் வாய்ப்பினைக் பெறுகின்றன. முறைமை முழுவதுமான திரவத்தன்மை அழுத்தத்தினை தீர்ப்பதற்கும் வங்கித்தொழில்நிறுவனங்கள் மீதான தாக்கத்தினைக் குறைப்பதற்கும் இவ்வசதி பயன்படுகின்றது. ஆகையினால், இவ்வசதி அவசரகால திரவத்தன்மை உதவி வசதியுடன் இணைந்த ஏற்றுக்கொள்ளாத நிலையுடன்கூடிய செயல்திறன் வாய்ந்த கொடுக்கல்வாங்கல் வழியொன்றாகும்.

### 3.2 அவசரகால திரவத்தன்மை உதவி வசதியினையும் அதன் தொழிற்பாட்டுக் கட்டமைப்பினையும் வலுப்படுத்தல்

வங்கித்தொழில் துறையின் சாத்தியமான ஒட்டுமொத்த முறைமையினையும் பாதிக்கக்கூடிய இடர்நேர்வுக்கு தயாராவதற்கான கொள்கை கருவித் தொகுதிகளின் ஒரு பாகமாக மத்திய வங்கியானது அவசரகால திரவத்தன்மை உதவிக் கட்டமைப்பினை வலுப்படுத்தியுள்ளது.

நாணயவிதிச் சட்டத்தின் 86ஆம் பிரிவின் பிரகாரம் நாணய மற்றும் வங்கித்தொழில் உறுதிப்பாட்டினை நேரடியாக அச்சுறுத்துகின்ற அவசரகால நிலையில் அல்லது நிதியியல் பீதி நிகழக்கூடிய காலப்பகுதியில் மத்திய வங்கி வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு அதிவிசேட கடன்களை அல்லது முற்பணங்களை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, அவசரகால திரவத்தன்மை உதவி என்பது ஒரு அல்லது சில தனிப்பட்ட வங்கித்தொழில் நிறுவனங்களைப் பாதிக்கின்ற தனிமுரண்பாட்டை (நிறுவனசார் நிறுவனத்திற்குக் குறிப்பான) தீர்ப்பதற்கு திரவத்தன்மையினை வழங்குவதற்கு மத்திய வங்கி பயன்படுத்துகின்ற அதிவிசேட கடன் அல்லது முற்பணம் ஒன்றாகும். அவசரகால திரவத்தன்மை உதவியின் முதன்மைக் குறிக்கோள் கடன்தீராற்றலற்ற தன்மைக்கு வழிவகுக்கின்ற தற்காலிக திரவத்தன்மையற்ற நிலை இடர்நேர்வினைத் தவிர்ப்பதும் தொற்றுகின்ற மற்றும் கசிகின்ற தாக்கங்களைத் தணிப்பதுமாகும். வங்கித்தொழில் நிறுவனமொன்று நிதியிடல் திரவத்தன்மையை நிறைவுசெய்வதில் இன்னல்களை எதிர்கொள்ளுகின்ற போது அது வங்கித்தொழில் நிறுவனங்களின் முறிவடைதலுக்கு வழிவகுக்கலாம்.

ஆகையினால், நாணயக் கொள்கையின் கீழ் குறுகியகால வட்டி வீதங்களை வழிநடத்துவதற்கு திரவத்தன்மை முகாமைத்துவ ஏற்பாடுகளை நடத்துவதற்குப் புறம்பாக, தற்காலிகத் திரவத்தன்மை பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கின்ற வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு மத்திய வங்கி திரவத்தன்மை வழங்கும் விதிவிலக்கான வழிமுறையொன்றாக வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு அவசரகால திரவத்தன்மை உதவியினை மத்திய வங்கி வசதிப்படுத்துகின்றது. அதற்கமைய, மேற்குறித்த சட்ட ஏற்பாடுகளின் கீழ் கடன்தீராற்றல் மிக்கதாகக் கருத்தப்படுகின்ற ஆனால், தற்காலிகமாக திரவத்தன்மையற்ற நிலையினை எதிர்கொள்ளுகின்ற ஏதேனும் வங்கித்தொழில் நிறுவனம், அதன் திரவத்தன்மை நிலையினை வலுப்படுத்தவதற்கான மத்திய வங்கியின் தற்றுணிவில் பலவகையான பிணைய உறுதிகளுக்கெதிரான அவசரகால திரவத்தன்மை உதவி வசதிக்குத் தகைமையுடையது. இவ்வசதியானது நிலையான வைப்பு வட்டி வீதத்தில் கிடைக்கப்பெறுகின்றது. இது பொதுவாக வங்கி நிதியியல் துறைச் செயலாற்றம் மற்றும் முறைமை உறுதித்தன்மை வீதம் எனக் குறிப்பிடப்படுகின்றது. தற்போது எல்லையொன்றுடன் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதத்தினைப் பயன்படுத்தி இது நிர்ணயிக்கப்படுகின்றது.

அதற்கமைய, மத்திய வங்கியின் ஒதுக்கு வடிவிலும் இறுதிக்கடன் ஈவோனாகவிருக்கின்ற மத்திய வங்கியின் மைப் பொறுப்பொன்றாகவும் திரவத்தன்மையினை உருவாக்குவதற்கான தனித்துவமான இயலுமையினைப் பயன்படுத்தி வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு இவ்வசதி வழங்கப்படுகின்றது. மேலும், வங்கித்தொழில் நிறுவனங்கள், குறைவடைந்த நெறிமுறைசார்ந்த அபாயங்களுக்கு வழிவகுக்கின்ற அத்துடன் நாணயக் கொள்கையினை மேற்கொள்வதற்கான அதன் இயலுமையுடன் சுயாதீனத்தினை அல்லது தலையீட்டினை விட்டுக்கொடுக்கக்கூடிய இழப்புகளிலிருந்து மத்திய வங்கியைப் பாதுகாக்கின்ற வங்கித்தொழில் தொழிற்பாடுகள் நியதிகளில் கண்டிப்பான நிபந்தனைகளை கடைப்பிடிப்பதனை உறுதிசெய்தல் வேண்டும். மேற்குறித்த திரவத்தன்மை வசதிகளை வழங்குவதன் வாயிலாக, நிதியியல் இடர்பாடு ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் தீர்க்கமாகச் செயற்படுவதற்கும் நிதியியல் முறைமையின் கடன்தீராற்றலை அச்சுறுத்துகின்ற சாத்தியமான பாதிக்கப்படும் தன்மைகளை இல்லாதொழிப்பதற்கும் முன்கூட்டியே செயற்படுவதற்கான அதன் விருப்பத்தினையும் இயலுமையினையும் மத்திய வங்கி எடுத்துக்காட்டுகின்றது. இது, நிதியியல் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையில் முறைமை முழுவதுமான நம்பிக்கையினை மீள நிலைப்படுத்தவதுடன் சொத்துக்களை குறைவானவிலையில் விற்பதனைத் தடுத்து ஒட்டுமொத்தமாக நிதியியல் முறைமையின் தொழிற்படு தன்மையினைக் காக்கின்றது.

**உசாத்துணைகள்**

Cecchetti, S.G., and Disyatat, P. (2009). ‘Central bank tools and liquidity shortages’ (www.newyorkfed.org/research/conference/2009).

Corbo, V. (2010). ‘Financial stability in a crisis: What is the role of the central bank’, BIS Papers, 51, pp. 27-30.

Douglas, W.D., Raghuram, G.R. (2003). ‘Liquidity Shortages and Banking Crisis’, NBER WP Series 10071.